**மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கோருரிமைத் தீர்ப்பாயம்**

**மோட்டார் வாகன விபத்து வழக்கு சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்: II.**

**விழுப்புரம்**

முன்னிலை : **திரு.நா.வெங்கடேசன்**, D.C., B.A.,M.L.,P.G.D.C.L.C.F.,

சிறப்பு சார்பு நீதிபதி எண்.2,

(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)

விழுப்புரம்.

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11-ஆம் நாள் புதன்கிழமை.

**மோ. வா.வி .இ. மனு எண்.141/2017**

(CNR.No.TNVP08000312-2017)

மோகன் .... மனுதாரர்

/ எதிர் /

1. சத்தியமூர்த்தி

2. ராகுல் .... எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| (1) | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி: | மோகன் த/பெ சண்முகம், வயது 38 எண்.4/49, விநாயகர் கோவில் தெரு, சடையாண்டிகுப்பம், விழுப்புரம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம். |
| (2) | 1 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி: | சத்தியமூர்த்தி த/பெ கண்ணன், மெயின் ரோடு, கல்மண்டபம், பாண்டிச்சேரி. |
| (3) | 2 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் முகவரி: | ராகுல் த/பெ குப்புசாமி, கலைஞர்நகர், சிறுவந்தாடு, விழுப்புரம் தாலுக்கா. |
| (4) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் | 01.06.2017 |

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:37:20 +0530

| | | |
|---|---|---|
| | செய்த தேதி : | |
| (5) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி: | 11.06.2025 |
| (6) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் | ரூ.1,90,446 (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூராயிரத்தி நானூற்று நாற்பத்தாறு மட்டும்) |
| (7) | வட்டி விகிதம் | 7.5% |
| (8) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து முழுத்தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (9) | செலவுத்தொகை விபரம் ஏதாவது இருப்பின்: | வக்காலத்திற்கான முத்திரை கட்டணம் ரூ. 10. 00<br>நீதிமன்ற கட்டணம் ரூ.1,277.00<br>வழக்கறிஞர் கட்டணம் ரூ.13,022.00<br>மொத்தம் ரூ.14,309/- இந்த வழக்கு செலவுத் தொகையான ரூ.14,309/- ஐ 1, 2 எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |
| (10) | உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம். | மனுதாரருக்கு, 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகின்றது. |

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:37:29 +0530

| | | |
|---|---|---|
| (11) | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம்: | இல்லை. |
| (12) | இழப்பீட்டு தொகை எதன் மூலமாக, எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்: | தீர்ப்பாணை தொகை முழுவதையும் 1, 2 எதிர்மனுதார்கள் இந்நீதிமன்றத்தின் (State Bank of India, ADB Villupuram Branch, A/C No: 42823762531, IFSC No: SBIN0003065, SWIFT) என்ற வங்கி கணக்கில் 1 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப் படுகின்றது. |
| (13) | இழப்பீட்டுத் தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம்: | 1, 2 எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாணை தொகை முழுவதையும் வைப்பீடு செய்த பின்பு மனுதாரர் அத்தொகையை நேரடியாக மனுதாரருடைய வங்கி கணக்கு மூலமாக NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப் படுகின்றது. |
| (14) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையருக்கு கிடைக்கத் தக்கதல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின்: | 09.11.2018 முதல் 14.11.2024 |
| (15) | இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம்: | ரூ.373/- |

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:37:36 +0530

| | | |
|---|---|---|
| (16) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியில் இருந்து 15 நாட்களுக்குள் மனுதாரர் செலுத்தப் பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம்: | ரூ.904/- |
| (17) | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம்: | ---- |

இம்மனு கடந்த 12.01.2017 ஆம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு நஷ்டஈடாக ரூ.7,00,000/-வழங்க கேட்டு எதிர்மனுதாரர்கள் மீது மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166(1)-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது கடந்த 01.06.2017 தேதியன்று விழுப்புரம், மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டு அந்நீதிமன்றத்தில் M.C.O.P:476/2017 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 11.08.2017 அன்று இந்நீதிமன்றத்தில் M.C.O.P:141/2017 என்ற புதிய எண் குறியீடு செய்து. இம்மனுவானது கடந்த 02.06.2025 தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருவாளர்.டி.பிரபாகரன் அவர்களும், 1, 2 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் 21.11.2017 ம்தேதி அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் சீரான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:37:46 +0530

**உத்தரவு**

1. **மனுதாரரது மனுவின் சுருக்கம்**:- கடந்த 12.01.2017 தேதியன்று சுமார் 14.30 மணியளவில் PY 01 X0905 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் பாண்டி- விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் நவமால் காப்பேர் பேருந்து நிறுத்தம் அருகில் சென்ற போது எதிர்திசையில் வந்த PY01CJ4519 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் வந்த ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் மனுதாரருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும், விபத்தினால் காயம்பட்ட மனுதாரரை அரியூர், வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றதாகவும் பின்னர் எம்.வி.ஆர் Medical centre உள்நோயாளியாக 4 நாட்கள் சிகிச்சைப் பெற்றதாகவும், மேற்சொன்ன விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கான நஷ்ட, ஈட்டுத் தொகை ரூ.7,00,000/- வேண்டி 1ம் எதிர்மனுதாரர் வாகன உரிமையாளர் என்ற வகையிலும், 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் என்ற வகையிலும் வழங்க பரிகாரம் வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராகியுள்ளார்கள்.

3. **மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்:-**

மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு மனுதாரர் கோரியவாறு கிடைக்கதக்கதா?

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:37:53 +0530

**4.** மனுதாரர் தரப்பில், **ம.சா.1** சாட்சி விசாரிக்கப்பட்டு, **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவக்குழு வழங்கியுள்ள ஊனச்சான்றிதழ் அறிக்கை நீ.ம.சா.ஆ-1 ஆக குறியீடப்பட்டுள்ளது.

**5. பிரச்சனை**

**அ.** மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள மனுதாரர் மோகன் மனுவில் கூறியுள்ள விவரங்களை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.1 தனது சாட்சியத்தில், 12.01.2017 தேதியன்று மதியம் சுமார் 2.30 மணியளவில் PY01X0905 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் பாண்டி- விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் நவமால் காப்பேர் பேருந்து நிறுத்தம் அருகில் சென்ற போது எதிர்த்திசையில் வந்த PY01CJ4519 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் வந்த ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் மனுதாரருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும், விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரான 2 ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றும், எனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் தனக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

**ஆ.** முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடப்பட்டுள்ளது. விபத்து குறித்து இரு சக்கர வாகன ஓட்டுநர் மீது கண்டமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.23/2017 இ.த.ச பிரிவுகள் 279, 337ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள விபரம்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:38:02 +0530

ம.சா.ஆ.1ன் முன்னிலைக்கு தெரியவருகிறது. மேற்படியான ஆவணத்தில் விபத்து நடந்த தேதி 12.01.2017 என்றும், வழக்கு பதிவு செய்யப்பட்ட நாள் 15.01.2017 என்றும், விபத்து ஏற்படுத்தியது PY01CJ4519 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் என்றும் விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.4 ஆவணங்கள் காணும்போது தெரியவருகிறது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்ததிலிருந்து விபத்து ஏற்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ள PY01CJ4519 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதும், விபத்து சமயத்தில் மேற்கண்ட வாகனத்தை ராகுல் என்பவர் ஓட்டியுள்ளார் என்பதும், விபத்து வாகனத்தின் எவ்வித இயந்திரக்கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதும் தெளிவாகத் தெரியவருகிறது. 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக ம.சா.1/மனுதாரர் கூறியுள்ளார். முதல் தகவல் அறிக்கை இரு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1, 2 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தின் முன் தோன்றி மனுதாரரின் கூற்றை பொய்பிக்க வேண்டியவர்கள் தோன்றாதரப்பினராகியுள்ளார்கள். எனவே மேற்கண்ட சூழ்நிலையில் 1ம்எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:38:09 +0530

**இ.** 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரான 2 ஆம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணம் என்று தீர்வு கண்டிருப்பதால் மனுதாரர் இழப்பீடு பெற அருகதையுடையவர். மேற்படி விபத்து வாகனத்தின் உரிமையாளர் 1 ஆம் எதிர்மனுதாரர் என்பதாலும், விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டிச்சென்றது 2 ஆம் எதிர்மனுதாரர் என்பதாலும், மனுதாரருக்கு இழப்பீட்டை 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ வழங்க வேண்டுமென்று தீர்வு காணப்படுகிறது.

**ஈ.** மனுதாரருக்கு அடிப்பட்ட உடன் அரியூர், வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றதாகவும் பின்னர் எம்.வி.ஆர் Medical centre 12.01.2017 முதல் 15.01.2017 ம்தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும், 13.01.2017 ம்தேதி closed reduction with intramedullary interlocking nailing அறுவை சிகிச்சை செய்ததாக ம.சா.ஆ.3 விடுவிடுப்பு அறிக்கை மற்றும் காயச்சான்றில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் காணமுடிகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் ஆகும். விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் குழு மனுதாரரை பரிசோதித்து நீ.ம.சா.ஆ.1 ஊனச் சான்றிதழை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அந்த ஊனச்சான்றிதழில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களின் விளைவாக 5% ஊனம் ஏற்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு 5% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து கீழ்கண்டவாறு இழப்பீடு கணக்கிடப்படுகிறது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:38:41 +0530

**அ. <u>ஊனத்திற்காக இழப்பீடு</u>**

மனுதாரருக்கு ஊனத்தின் தன்மை பொருத்து ஏற்பட்டுள்ள இழப்பீட்டுக்கு பின்வருமாறு முடிவு காணப்படுகிறது. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவக் குழுமத்தின் மூலம் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழின் நீ.ம.சா.ஆ.1 ன்படி 5% பகுதி ஊனம் ஏற்பட்டுள்ளதாக கண்டுள்ளது. அதன்படி (5X5000=25,000) ரூ.25,000/-த்தை பெற தகுதியுடையவர் என இந்நீதிமன்றம் கருதி அதன்படியே இப்பிரச்சனைக்கு செலவுத் தொகையுடன் தீர்வு காணப்படுகிறது.

**ஆ. <u>வலி, மனவேதனை மற்றும் மன உளைச்சல் :-</u>**

விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக எம்.வி.ஆர் Medical centre 12.01.2017 முதல் 15.01.2017 ம்தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும், 13.01.2017 ம்தேதி closed reduction with intramedullary interlocking nailing அறுவை சிகிச்சை செய்துள்ளதாகவும், மேலும் 5% ஊனம் ஏற்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட மேற்படி காயங்களுக்காக அதிகபடியான மனவலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளதால் ரூ.25,000/- மனவலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**இ. <u>வருமான இழப்பு :-</u>**

விபத்திற்கு முன்பு மனுதாரர் கம்பெனியில் Machine operator வேலை செய்து மாதம் ரூ.15,000/- வருமானம் ஈட்டி வந்ததாக சொல்லப்படுவதற்கு ஏதுவாக ஆவணம் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உறுதிப்படுத்திக்கொள்ள மனுதாரர் தவறி உள்ளார்.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:38:49 +0530

ம.சா.ஆ.6 ஆதார் அடையாள அட்டை மற்றும் ம.சா.ஆ.2 காயச் சான்றிதழ் ஆகியவற்றை ஒருகிணைந்து பார்க்கும் போது விபத்து நாளில் மனுதாரருக்கு 37 வயது என்பது உறுதிப்படுகிறது. அதனால் மனுதாரரின் வயது, அவரின் வேலை மற்றும் விபத்து நடந்த வருடம் 2017 என்ற நிலையில் மனுதாரரின் மாத வருமானம் தோராயமாக ரூ.10,000/- ஈட்டியிருக்க வேண்டும் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மேற்சொன்ன விபத்தினால் மனுதாரர் மூன்று மாதம் வரை தன்னுடைய பணியை மேற்கொண்டு இருக்க வாய்ப்பில்லை என்பதால் மனுதாரருக்கு (3X10,000=ரூ.30,000/-) வழங்க உத்தரவிடப்படுகிறது.

ஈ. <u>ஊட்டச்சத்து</u> :-

மனுதாரர் சிகிச்சையிலிருந்த போதும், சிகிச்சைக்காக பின்னிட்டு விபத்து காயங்களை ஆற்றுவதற்காக அதிகப்படியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார். அந்த வகையில் அவர் ஊட்டச்சத்துணவு எடுத்துக்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்துணவிற்காக ரூ.10,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>ஆடை சேத மதிப்பு</u> :-

மனுதாரருக்கு விபத்தின் போது அணிந்திருந்த ஆடை சேதத்திற்காக ரூ.1,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>போக்குவரத்து செலவுக்காக</u>

விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் போக்குவரத்து மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார் என்பதற்கான உறுதியூட்டப்பட்ட சாட்சியங்கள் மற்றும்

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:39:10 +0530

சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் விபத்து ஏற்பட்ட இடம், சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை ஆகியவற்றை கருத்தில் கொண்டு போக்குவரத்து ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**மருத்துவச் செலவு ரசீது**

மேற்படி மனுதாரருக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைக்கான மருத்துவச் செலவுத் தொகை என்ற வகையில் ம.சா.ஆ.5 ன் படி ரூ.64,446/- செலுத்தியுள்ளதாக காணமுடிகிறது. மருத்துவ செலவினத்தை அப்படியே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதன்படி மருத்துவ சிகிச்சைக்கான தொகை ரூ.64,446/- உத்தரவிடப்படுகிறது.

**உடனிருந்து பணிவிடை செய்தவற்கான செலவு**

சிகிச்சையின் போது மனுதாரருக்கு உடனிருந்து பணிபுரிந்த நபர்களுக்கான செலவுத்தொகை என்ற வகையில் ரூ.30,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**6.** ஆக, மனுதாரருக்கு கிடைக்கப்பெற வேண்டிய மொத்த இழப்பீட்டு தொகை என்ற வகையில்,

| | | | |
|---|---|---|---|
| 1) | மனுதாரரது வருமான இழப்பு | ரூ. | 30,000 |
| 2) | போக்குவரத்து செலவுக்காக | ரூ. | 5,000 |
| 3) | வலி, மனவேதனை மற்றும் மன உளைச்சல் | ரூ. | 25,000 |
| 4) | மருத்துவ செலவு ரசீது | ரூ. | 64,446 |
| 5) | ஊட்டசத்து | ரூ. | 10,000 |
| 6) | உடனிருந்து பணிவிடை செய்தவற்கான செலவு | ரூ. | 30,000 |

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:39:18 +0530

| | | | |
|---|---|---|---|
| 7) | ஆடை சேதாரத்திற்காக | ரூ. | 1,000 |
| 8) | ஊனத்திற்காக | ரூ. | 25,000 |
| | **மொத்த இழப்பீட்டுத் தொகை** | **ரூ.** | 1,90,446 |

**9.** முடிவாக,

**அ.** இந்த மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

**ஆ.**1, 2 எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கான இழப்பீட்டினை ரூ.1,90,446 (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூராயிரத்தி நானூற்று நாற்பத்தாறு மட்டும்) மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் காலம் வரை வருடத்திற்கு 7.5 வட்டி செலுத்த உத்தரவிடப்படுகிறது. மனுதாரரின் தவறுகைக்காக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டிருந்த காலமான 09.11.2018 முதல் 14.11.2024 தேதி வரையிலான காலத்திற்கு வட்டி வழங்க தவிர்க்கப்படுகிறது.

**இ.** 1, 2 ம்எதிர்மனுதாரர்கள் 1 மாத கால அவகாசத்திற்குள் விழுப்புரம் SBI வங்கியின் ADB கிளையில் வங்கி IFS Code No.SBIN0003065 SWIFT) உள்ள இந்நீதிமன்ற வங்கிக் கணக்கில் (A/C.No.42823762531) நேரடி வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

**ஈ.**இழப்பீட்டுத் தொகையை செலுத்திய உடன் மனுதாரருக்கு/மனுதாரர் வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு உரிய ஆதாரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:39:26 +0530

**உ.** மேற்படி இழப்பீட்டுத் தொகையை, மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் வரையில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், மனுதாரர் மனு தாக்கல் செய்து அதில் பிறப்பிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில், நேரடியாக மனுதாரருடைய வங்கி கணக்கு மூலமாக NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

**ஊ.** மனுதாரர் செலுத்த வேண்டிய மொத்த நீதிமன்றக் கட்டணம் ரூ.1,277/- மனுதாரர் நீதிமன்றக் கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார். மனுதாரர் மீதம் செலுத்த வேண்டிய நீதிமன்றக் கட்டணம் ரூ.904/- உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**எ.** வழக்கறிஞர் கட்டணம் ரூ.13,022/- என நிர்ணயம் செய்யப்படுகின்றது.

**ஏ.** 1, 2 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கான செலவு ரூ.1,287/- மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.13,022/- மொத்தம் ரூ.14,309/- ஆகியவற்றை மனுதாரருக்குச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>செலவுத் தொகை பட்டியல்</u>**

| | **மனுதாரர்** | **ரூ.** | **எதிர்மனுதாரர்** | **ரூ.** |
|---|---|---|---|---|
| **1.** | வக்காலத்து | 10.00 | | |
| **2.** | நீதிமன்ற கட்டணம் | 1,277.00 | | |

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:39:35 +0530

| | | | |
|---|---|---|---|
| **3.** | வழக்கறிஞர் கட்டணம் | 13,022.00 | இல்லை |
| | மொத்தம் | ரூ. 14,309.00 | |

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஜூன் திங்கள் 11-ம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:39:40 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்: 2
( மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)
விழுப்புரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி**-

ம.சா.1 - மோகன்

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**:-

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 15.01.2017 | முதல் தகவல் அறிக்கையின் சான்றிடப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | --- | அரியூர், வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மனுதாரர் சிகிச்சைப் பெற்றதற்காக வழங்கப்பட்ட காயச் சான்றிதழ் சான்றிடப்பட்ட நகல். |
| ம.சா.ஆ.3 | 15.01.2017 | பாண்டிச்சேரி, MVR Medical centre மனுதாரர் சிகிச்சைப் பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிடுப்பு அறிக்கை சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.4 | --- | 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் சான்றிடப்பட்ட நகல். |

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:39:48 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | --- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழின் சான்றிடப்பட்ட உண்மை நகல். |
| ம.சா.ஆ.6 | --- | மனுதாரர் ஆதார் அட்டையின் சான்றிடப்பட்ட நகல். |
| ம.சா.ஆ.7 | --- | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் சான்றிடப்பட்ட நகல். |
| ம.சா.ஆ.8 | --- | மனுதாரரின் வருமான வரி சான்றிட்ட நகல். |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-** --இல்லை--

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-** இல்லை

**நீதிமன்ற சான்றாவணம்**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | - | விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வழங்கிய ஊனச்சான்றிதழ். |

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2025.06.11 17:39:54 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்: 2

(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)

விழுப்புரம்.